## கெபித்திகொள்ளாவ பிரதேச சபை

## அனுராதபுரம் மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கெபித்திகொள்ளாவ பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 401,835 தொகையான 12 நிலையான சொத்து விடயங்கள் கணக்கு வைக்கப்பட்டிராததுடன் மேலும் 05 சொத்து விடயங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டியதாக தீர்மானிக்கப்பட்ட 06 விடயங்களுக்குரிய வருமானம் ரூபா 560,716 அதிகமாகவும், 05 விடயங்களுக்குரிய வருமானம் ரூபா 175,127 தொகை குறைவாகவும் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப் பண வருமானம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் தீர்மானிக்கப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தேறிய சொத்துக்களின் கூட்டுத்தொகை மற்றும் திரண்ட நிதியத்தை உள்ளடக்கிய பொறுப்புக்களின் கூட்டுத்தொகைகளுக்கிடையே ரூபா 1,827,017 ஆன வேறுபாடு காணப்பட்டது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

(அ) 04 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிகளின் கூட்டுத்தொகைக்கிடையே ரூபா 573,153 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) பிரதேச சபைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு முறைமையின் பிரகாரம் நிலையான சொத்துக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி என்பன ஒன்றுக்கொன்று சமமாக இருக்க வேண்டிய போதிலும் அந்தக் கணக்குகள் இரண்டிற்குமிடையே ரூபா 6,559,706 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 247,748 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 632,635 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 207,222 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 180 இன் பிரகாரம் காசு அல்லது களஞ்சியத்திற்கு பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள் அல்லது வருமானம் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களினால் பிணைப் பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 237 இன் பிரகாரம் களஞ்சிய வழங்கலுக்கான கொடுப்பனவுகளைச் செய்யும் போது உரிய பொருள் உடன்படிக்கையின் பிரகாரம் தரமானதாக களஞ்சியத்திற்கு கிடைத்தமைக்கு சான்றிதழ் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த தேவைப்பாடு புறக்கணிக்கப்பட்ட 17 சந்தர்ப்பங்களின் போது ரூபா 112,689 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 100 | 260 | 160 |
| (ii) | வாடகை | 1,835 | 1,327 | 597 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 289 | 382 | 93 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,834 | 527 | 1,423 |

**2.3.2 ஆதன வரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) மற்றும் 153(1) ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஆதனங்களின் வருடாந்த பெறுமானத்தின் அடிப்படையில் ஆதனவரி விதித்தல் மற்றும் அபிவிருத்தியடையாத காணியின் அடிப்படையில் வரி விதித்து அறவிடுவதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**2.3.3 கடை வாடகை**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்குச் சொந்தமாக இருந்த 05 கடைகளிலிருந்து கடந்த 03 ஆண்டுகளுக்குரிய நிலுவையாக இருந்த ரூபா 80,102 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண அளவுகள் தீர்மானிக்கப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 ஏனைய வருமானம்**

உள்ளூராட்சி ஆணையாளரின் 1989 செப்தெம்பர் 30 ஆந் திகதிய எல்ஜீ/3 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் viii ஆம் பந்தியின் பிரகாரம் வாடகை ஆதனங்களில் ஆகக் குறைந்த கூறுவிலை அறவிடப்படாமையினால் சபைக்கு ரூபா 349,200 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 1,170,000 பெறுமதியான 02 டெக்ரர்கள் 03 வருட காலத்திலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5 ஒப்பந்த நிருவாகம்

மாகாண பொறியியல் திணைக்களத்தின் நிலைமைக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படாமல் 05 நிர்மாணங்களுக்காக ரூபா 3,608,558 கூட்டுத்தொகையானது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் நிலைமைக் கட்டுப்பாட்டு அறிக்கையின் பிரகாரம் நியமங்களுக்கு இணங்காதிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தும் ஒரு நிர்மாணத்திற்காக ரூபா 441,720 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 13 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,083,935 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

### 2.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது சபையினால் சுற்றாடலை சுத்தமாக்கும் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்